**CC.No.329/2019 (JM.No.II, DHARMAPURI)**

**19.09.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW–3 : திரு.சண்முகம், த/பெ. மாது**

**<u>முதல் விசாரணை</u>**

நான் அதகபாடியில் குடியிருந்து டீக்கடை வைத்து நடத்திவருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த விபத்தில் இறந்துபோன முருகனை எனக்கு தெரியாது. கடந்த 4, 5 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 05.00 மணிக்கு அதகபாடியில் இபி ஆபிஸ் அருகே விபத்து நடந்த இடத்தில் நிறைய நபர்கள் கூட்டமாக இருந்தார்கள். அப்போது நானும் சென்று பார்த்தேன். நான் சென்று பார்த்தபோது அதற்கு முன்னே விபத்து நடந்திருந்தது. அங்கு யாரும் இல்லை. இந்த விபத்து குறித்து போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

கடந்த 20.10.2018ம் தேதி மாலை 04.00 மணிக்கு அதகபாடியில் உள்ள இபி ஆபிஸ் அருகே நின்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது பென்னாகரம் பக்கமிருந்து தருமபுரி நோக்கி இடதுபுறமாக சென்று கொண்டிருந்தபோது தருமபுரி பக்கமிருந்து பென்னாகரம் நோக்கிவந்த இருசக்கர வாகன ஓட்டுநர் அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து இந்த விபத்தில் இறந்த முருகன் என்பவர்மீது மோதியதில் விபத்து ஏற்படுத்தியதை நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட விபரத்தை விபத்தை நேரில் பார்த்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக இந்த விபத்து குறித்து எதுவும் தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.

**CC.No.329/2019 (JM.No.II, DHARMAPURI)**

**19.09.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW–4 : திரு.மாதையன், த/பெ. லட்சுமணன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் சின்னதடங்கத்தில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது. சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 05.30 மணிக்கு அதகபாடியில் இபி ஆபிஸ் அருகே பால் ஊற்ற சென்றபோது இரண்டு இருசக்கர வாகனங்கள் விபத்துக்கு உள்ளாகியிருந்தது. அப்போது இண்டூர் போலிசார் விபத்து நடந்த இடத்தை விசாரணை செய்து மாதிரிவரைபடம் வரைந்து ஒரு தாளில் எழுதினர். எழுதிய தாளில் நான் 1வது கையெழுத்து இட்டேன். அந்த பார்வை மகஜர் **<u>அ.த.சா.ஆ.2</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுகுறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

விபத்தில் எந்ததெந்த வாகனம் மோதி யார் யாருக்கு விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்து யாருடைய அஜாக்கிரதையால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுகொண்டதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விபரத்தை நான் படித்து பார்க்கவில்லை. ஆனால் அதில் எழுதியிருந்த விபரத்தை போலிசார் படித்து காண்பித்தனர்.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.

CC.No.329/2019 (JM.No.II, DHARMAPURI)

19.09.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரி ஆஜர்)**

**PW–5 : திரு. மாது, த/பெ. சகாதேவன்**

<u>முதல் விசாரணை</u>

நான் அதகபாடியில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 04.30 மணிக்கு இண்டுர் போலிசார் விபத்து நடந்த இடத்தை விசாரணை செய்து ஒரு கையெழுத்து கேட்டதன்பேரில் நான் கையெழுத்து செய்தேன். நான் கையெழுத்து இட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து மட்டும் **<u>அ.த.சா.ஆ.3</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த விபத்து குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)**

<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>

கடந்த 20.10.2018ம் தேதி மாலை 05.30 மணிக்கு விபத்து நடந்த இடமான அதகபாடி இபி ஆபிஸ் அருகே போலிசார் விபத்து நடந்த இடத்தை போலிசார் பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்தார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் சாட்சியாக இருந்து 2வது சாட்சி கையெழுத்து செய்துவிட்டு ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பார்வை மகஜரில் உள்ள விபரம் தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.